
## திராவிடத்தால் வாழ்கிறோம்

961

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

138





# பென்ட்லெண்ட் அரசு பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை - வேலூர்

## சேவையையும் வரலாற்றையும் மீட்ட அரசு!

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களைக் கட்டுதல், மருத்துவமனைகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், நவீன மருத்துவக் கருவிகளை நிறுவுதல் என கடந்த நான்கு ஆண்டுகளில் பல பணிகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருவதை அனைவரும் அறிவோம். அதன்மூலம் ‘அனைவருக்கும் நலவாழ்வு' என்கிற உயரிய நோக்கத்தைச் செயல்படுத்திக்கொண்டிருக்கிறது திராவிட மாடல் அரசு.

குறிப்பாக, மக்களைத் தேடி மருத்துவம், சாலை விபத்துகளில் உயிரிழப்புகளைத் தடுக்கும் வகையில், இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 , சுகாதார நடைபாதை, பாதம் காப்போம் எனப் பல திட்டங்களை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மூலம் அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்தப் பணிகளின் தொடர்ச்சியாக, ‘திராவிட மாடல்' அரசின் அடையாளம் சொல்லும் பணியாக உருவாகியுள்ளது வேலூர் பென்ட்லெண்ட் அரசு பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை.

வேலூரின் மையப் பகுதியில் அமைந்துள்ளது இந்த பென்ட்லெண்ட் மருத்துவமனை. 7 தளங்களுடன், 3,77,263 சதுர அடி பரப்பில் மிகப் பிரமாண்டமாக அமைந்துள்ள இந்த உயர் சிறப்பு பல்நோக்கு மருத்துவமனையைக் கடந்த, ஜூன் 25-ஆம் தேதி திறந்துவைத்தார், மாண்புமிகு முதலமைச்சர் திராவிட மாடல் நாயகர் அவர்கள்.

### 200 ஆண்டுகால வரலாறு!

இந்த பென்ட்லெண்ட் மருத்துவமனையின் வரலாறு 200 ஆண்டுகளுக்கும் மேற்பட்டது. 1882-ஆம் ஆண்டு ஆங்கிலேயர் காலத்தில் தொடங்கப்பட்டது. பின்னர் 1915-ஆம் ஆண்டு கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டன என மருத்துவமனை வரலாறு சொல்கிறது. அதன்பின்னர், அந்த மருத்துவமனையின் சேவைகள் படிப்படியாக குறைந்ததுடன், அடுக்கம்பாறையில் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட்டதால், பென்ட்லெண்ட் மருத்துவமனையின் சேவைச் செயல்பாடுகள் நின்றன.

நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள இந்த மருத்துவமனையும் செயல்பாட்டுக்கு வந்தால், வேலூர் மக்களின் மருத்துவத் தேவை மேலும் சிறப்பாக இருக்கும் என மக்கள் விரும்பினர். இதுதொடர்பாக, எழுந்த கோரிக்கைகளைப் பரிசீலித்த திராவிட மாடல் அரசு பென்ட்லெண்ட் மருத்துவ மனையை மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதற்குத் தயாரானது. மருத்துவமனையை விரிவாக்கம் செய்வதன் மூலம், அதிநவீன மருத்துவமனையாகத் தரம் உயர்த்தவும் திட்டமிட்டது அரசு.

### 560 படுக்கை வசதிகள்

இதையடுத்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், ரூ.197 கோடி மதிப்பீட்டில் உயர் சிறப்பு பல்நோக்கு மருத்துவமனையை அமைக்க, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2023-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 22-ஆம் தேதி, மருத்துவமனை கட்டுமானப் பணிகளை, தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி நிகழ்ச்சி வழியாக, முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

கட்டுமானப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று, கடந்த ஜூன் 25-ஆம் தேதி மக்கள் பயன்பாட்டுக்காக இந்த மருத்துவமனையை, முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

2,15,278 சதுர அடி நிலப் பரப்பளவில், 3,77,263 சதுர அடி கட்டடப் பரப்பில் தரைத்தளம் மற்றும் ஏழு தளங்களுடன் இந்த மருத்துவமனைக் கட்டடம் அமைந்துள்ளது. 560 படுக்கைகள், 11 அறுவை சிகிச்சை அரங்குகள், 6 மின் தூக்கிகள், சமையலறை, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்பட அனைத்து வசதிகளும் இங்கு அமைந்துள்ளன.

இந்த மருத்துவமனையின் தரைத்தளத்தில் மகளிர் நலப்பிரிவு, மகப்பேறு பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, அவசரகால அறுவை சிகிச்சை அரங்கம், குழந்தைகள் அவசர சிகிச்சைப் பிரிவு, புறநோயாளிகள் பிரிவு, கதிரியக்க நோயறிதல் துறை, இரத்த மாதிரி சேகரிப்புக் கூடம், சலவை துணித் தொகுதி ஆகியவை அமைந்துள்ளன.



### மக்கள் சேவை தொடரும்!

முதல் தளத்தில் குழந்தைகள் அறுவை சிகிச்சைப் பிரிவு, இரத்த வங்கி, குழந்தைகள் பிரிவு ஆகியவையும், இரண்டாம் தளத்தில் குழந்தைகள் மருத்துவம், அறுவை சிகிச்சைப் பிரிவு, மருத்துவ உருவகப்படுத்துதல் ஆய்வகம், வளர் இளம் பருவத்தினருக்கான பிரிவு, குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவு ஆகியவையும், மூன்றாம் தளத்தில் பச்சிளம் குழந்தைகள் நலப் பிரிவு, பிறந்த குழந்தை தீவிர சிகிச்சைப் பிரிவு, பச்சிளம் குழந்தைகள் தொடர் கவனிப்புப் பிரிவு ஆகியவையும் அமைந்துள்ளன.

நான்காம் தளத்தில் மகப்பேறு கால முன் கவனிப்புப் பிரிவு, மகப்பேறுகால பின் கவனிப்புப் பிரிவு, மகப்பேறு தீவிர சிகிச்சைப் பிரிவு ஆகியவையும், ஐந்தாம் தளத்தில் பெண்கள் நலவியல் மருத்துவப் பிரிவும், ஆறாம் தளத்தில் ஆய்வகங்கள், நுண்ணுயிரியல் பிரிவு, உயிர் வேதியியல் பிரிவு, நோய் கண்டறிதல் துறை ஆகியவையும், ஏழாம் தளத்தில் அறுவை சிகிச்சை அரங்கங்கள், மயக்க மருந்துக்குப் பிந்தைய பராமரிப்புப் பிரிவு ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன.

அன்று பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில், மிகப் பெரிய சேவையாற்றி வந்தது இந்த பென்ட்லெண்ட் மருத்துவமனை. வேலூர் சுற்றுவட்டாரப் பகுதியில் உள்ள பொதுமக்கள், பழங்குடி மக்கள், பிரிட்டிஷ் அதிகாரிகள், வேலூர் கோட்டைப் படை வீரர்கள் என அனைவருக்கும் சேவையாற்றிய நீண்ட வரலாற்றினைக் கொண்டது இந்த மருத்துவமனை. இப்போது, நவீன வசதிகளுடன் பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையாக மாற்றம் பெற்று, மக்கள் சேவையைத் தொடர்வதுடன் வரலாற்றுத் தொடர்ச்சியினையும் தக்க வைத்துள்ளது. காரணம் வரலாற்றுச் சிறப்புமிக்க ‘திராவிட மாடல்' அரசு.

> “நவீன வசதிகளுடன் பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையாக மாற்றம் பெற்று, மக்கள் சேவையைத் தொடர்வதுடன் வரலாற்றுத் தொடர்ச்சியினையும் தக்க வைத்துள்ளது.”

...சாதனை தொடரும்

## பறிபோகும் அரசியல் சுதந்திரம்!

‘பா.ஜ.க. ஆட்சி அறிவிக்கப்படாத எமர்ஜென்சி' என்பதுதான் எதிர்க்கட்சிகளின் பரவலான குற்றச்சாட்டு. நீதித்துறை, தேர்தல் ஆணையம், விசாரணை அமைப்புகள், புள்ளியியல் துறை என பா.ஜ.க. அரசால் பாதிக்கப்படாத துறை என ஒன்றுகூட இல்லை. 2014-ஆம் ஆண்டில் மோடி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, பத்திரிகை சுதந்திரக் குறியீட்டில், இந்தியா 180 நாடுகளில் 140-வது நாடாக இருந்தது. பா.ஜ.க. ஆட்சியில் 163-வது இடத்துக்கு மேலும் பின்தள்ளப்பட்டது. பி.பி.சி., நியூஸ் கிளிக் என முன்னணி ஊடகங்கள் பலவும் நெருக்கடிக்கு உள்ளாகின. அமலாக்கத்துறையால் சோதனைக்குள்ளாக்கப்பட்ட அரசியல் தலைவர்களில் 95% பேர் எதிர்க்கட்சியினர்.

இந்துத்துவா அமைப்புகளால், அதன் தலைவர்களால் பரப்பப்பட்ட சிறுபான்மையினர் மீதான வன்முறைகள், வெறுப்புப் பேச்சுகளும் கொஞ்ச நஞ்சமல்ல. இப்படி கடந்த 11 ஆண்டு காலம் அரசியல் ரீதியாகவும், அடிப்படை வாழ்வுரிமை ரீதியாகவும் இந்த நாட்டின் பெரும்பான்மை மக்கள் சந்திக்கும் இடர்பாடுகள் குறித்து, எதிர்க்கட்சிகள் தினம்தோறும் கவலைகளையும், எதிர்ப்புகளையும் வெளிப்படுத்திக்கொண்டுதான் இருக்கின்றன. அவற்றுக்கு வலுசேர்க்கும் விதமாக, 2014-ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் அரசியல் சுதந்திரம் வேகமாக பறிபோய்க் கொண்டிருக்கிறது என அட்லாண்டிக் கவுன்சிலின், ‘ஃப்ரீடம் அண்ட் பிராஸ்பெரிட்டி இன்டக்ஸ்' ஆய்வறிக்கை எச்சரிக்கிறது. 164 நாடுகளைக் கொண்ட இந்தப் பட்டியலில் அரசியல் சுதந்திரத்துக்கான தரவரிசையில், 94-வது இடத்திலும், வாழ்வியல் செழிப்புக்கான தரவரிசையில் 111-வது இடத்திலும் இந்தியா பின்தங்கி இருக்கிறது.

அரசியல், சட்டம் மற்றும் பொருளாதாரம் ஆகிய மூன்று முக்கிய குறியீடுகளை அளவீடாகக் கொண்டு, வருமானம், சுகாதாரம், சமத்துவமின்மை, சுற்றுச்சூழல் மற்றும் சிறுபான்மையினரின் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. ஜனநாயகம் காக்கப்படட்டும்!

## ஃப்ளாஷ்பேக்





எஸ்.கண்மணி

### கோடி ரூபாய் கொடுத்தாலும் ஈடாகாது!

1999-ஆம் ஆண்டு, என் மகன் க.கி.உதயசூரியனின் இரண்டாவது பிறந்த நாளையொட்டி, தலைவரிடம் வாழ்த்து பெற அண்ணா அறிவாலயம் அழைத்துச் சென்றார், என் தந்தை மறைந்த திருப்பத்தூர் கோ.சண்முகம். அப்போது அவர் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். “கட்சி சின்னத்தையே பேரனுக்கு வெச்சிட்டியேய்யா...” என அப்பாவிடம் உரையாடியதுடன், என் மகனுக்குத் தின்பண்டம் கொடுத்து வாழ்த்தினார் தலைவர். அன்று சட்டமன்றத்தில் காரசார விவாதம் நடந்திருந்தாலும், கட்சித் தொண்டர்களைக் கண்டால், தலைவர் உற்சாகமாகி விடுவார். அன்று எங்களோடும் தலைவர் உற்சாகமாக உரையாடி அனுப்பினார். கோடி ரூபாய் கொடுத்தாலும், இந்தப் புகைப்படம் சொல்லும் அனுபவத்துக்கு ஈடாகாது.

– எஸ்.கண்மணி,
மாவட்ட மகளிர் தொண்டரணித் தலைவர், திருப்பத்தூர்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### நகர மன்றங்களில் தி.மு.க.

1959-ஆம் ஆண்டு, நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் 53 நகர்மன்றங்களில் 34 மன்றங்களைத் காங்கிரஸ் கைப்பற்ற முடியாது போயிற்று. கழகத் தோழர்கள் கடுமையான போட்டிக்கு இடையே மகத்தான வெற்றி பெற்றனர். பல மன்றங்களில் தி.மு.க. ஒரு புதிய சக்தியாக விளங்கியது. சென்னை மாநகராட்சி மன்றத்தில் 90 இடங்களில் போட்டியிட்ட தி.மு.க. 45 இடங்களைக் கைப்பற்றியது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131